பக்கங்கள்: 08 விலை: 20/=

# காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 25 வியாழக்கிழமை 09.07.2020 கதிர் 111

## யாழ்.நகரில் பொலித்தீன் அகற்றவுள்ளது ராணுவம்!

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாணம் மாநகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றி சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் பணி எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

2

## சுமந்திரனின் எஸ்.ரி.எவ். பாதுகாப்பு அதிகரிப்பு!



யாழ்ப்பாணம், ஜூலை 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ்விசேடஅதிரடிப்படையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் ஊடகப்

2

## வடக்கில் 2,327 கிலோ கிராம் கஞ்சா இவ்வருடம் கைப்பற்றியது கடற்படை!

யாழ்ப்பாணம், ஜூலை 09

வடக்கில் இவ்வருடம் 2,327 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வடக்குக் கடற்படை கட்டளைத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் போதைப்பொருள் கடத்தல் வடக்கில் அதிகரித்துள்ளதாக தெரிவித்த வடக்குக் கடற்படை கட்டளைத் தலைமையகம்,

வடக்கு மாகாணத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வருடம் அதிகளவிலான போதைப் பொருள்கள் இலங்கைக்

2

## மின் கட்டணத்துக்கு 25 வீதம் நிவாரணம்

கொழும்பு, ஜூலை 09

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் மின்சார கட்டணங்களில் 25 வீதத்தைக் குறைப்பதற்குஅரசுதீர்மானித்துள்ளது.

அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இது தொடர்பில் இன்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை

2

# இலங்கையில் மீண்டும் கொரோனா தாண்டவம்

## கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தைச் சேர்ந்த 57 பேர் இலக்கு

**இலங்கையில் இன்று ஒரே நாளில் புதிதாக 57 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வுமத்தியநிலையத்தில்புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வந்த வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் மற்றும் அதன் ஊழியர்கள் உட்பட 450 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களில் 56 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

2

## தமிழரசைப் பாதுகாக்க தாய்க்குலம் ஓரணியில்!

**கூறுகின்றார் விமலேஸ்வரி**

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 09

இலங்கைத் தமிழரசுக்கட்சியையும், அதன் சின்னத்தையும் பாதுகாப்பதற்காக தாய்க்குலம் ஓரணியில் திரண்டுள்ளது என அந்தக்கட்சியின் உறுப்புரிமையில் இருந்து அண்மையில் நீக்கப்பட்ட முன்னாள் யாழ். மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்துள்ளார்.

2

## வாள்வெட்டுக் கும்பல் பாவித்த வீடு முற்றுகை!

**நீர்வேலியில் ராணுவச் சீருடைகள் கைக்குண்டு மற்றும் வாள்கள் மீட்பு**

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்கள் தங்கியிருந்து குற்றச்செயல்களில் ஈடுபட்ட வீடு பொலிஸாரால் முற்றுகையிடப் பட்டுள்ளது.

2

## யாழ். மாநகர சபையில் கூட்டமைப்பு வெளிநடப்பு

யாழ்ப்பாணம் , ஜூலை 09

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வுக்கு அறிவிக்கப்பட்ட அறிவித்தல் சட்டபூர்வமான கால எல்லையைக் கொண்டிருக்கவில்லை என மாநகர சபையின் செயலாளர் அ.சீரான் தெரிவித்தமையை அடுத்து, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் சபையில் இருந்து வெளியேறினர்.

2

## விபத்தில் சிக்கியோரில் இருவர் வேட்பாளர்கள்!

சங்குபிட்டி பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சை குழு 03 போட்டியிடும் வேட்பாளர்கள் இருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மூவரும் பயணித்த ஓட்டோவும் டிப்பர் வாகனமும், சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் நேற்று மாலை விபத்துக்கு

2



## பயங்கரவாதம் மீளுருவாக நல்லாட்சியே வழி செய்தது

### மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை09

நல்லாட்சி அரசு உளவுத் துறையை முடக்கி தகவல்களை மறைத்ததன் மூலம் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கு வழி ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகல் கடுகம்பளை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற சந்திப்பொன்றின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டைப்பயங்கரவாதத்திலிருந்து மீட்டிருந்த

2



நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆம் ஆண்டு ஜூலை 09 இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சு 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதன் நினைவேந்தல் நிகழ்வு இன்று மாலை அங்கு நடைபெற்றது.

(படம் - மயூதரன்)



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கையில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. குறித்த நபர் கடந்த மூன்று மாதக்காலமாக கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத் தப்பட்ட நபராவார்.

அதன்படி, அங்கிருந்த கைதிகள் உட்பட 450 பேர் பி.சி.ஆர். பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல், இன்று காலை மாரவில பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக் குள்ளான பெண் ஒருவர் இனங்காணப் பட்டார்.

கந்தக்காடு போதைப்பொருள் புனர் வாழ்வு மத்திய நிலையத்தில் ஆலோச கராகச் செயற்பட்ட பெண் ஒருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள் ளாகியுள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,151 ஆக அதி கரித்துள்ளது.

இன்று மேலும் 12 பேர் குணம டைந்து வெளியேறியுள்ள நிலையில் இதுவரை குணமடைந்தவர்களின் எண் ணிக்கை 1,979 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை 11பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் சுமந்திரன் மீது தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருந் தன என்ற சந்தேகத்தில் முன்னாள் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டு அது தொடர்பான வழக்கு விசாரணை கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் சுமந்திரனுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு தற்போதைய அரசின் ஆரம்ப நாள்களில் நீக்கப்பட்டு, பின் னர் ஒரு சில நாள்களில் மீள வழங்கப் பட்டது.

நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் 5 நடைபெற இருக்கின்ற நிலை யில் பல கட்சிகளும் இதில் போட்டியிடு கின்றன.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்தி ரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாகவும் அந்த அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருப்பதாக தேசிய புல னாய்வுப் பிரிவு வழங்கிய அறிக்கைக்கு அமையவும் சுமந்திரனுக்கு அதிரடிப்ப டையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது. அண்மையில் இயக்கச்சிப் பகுதியில் குண்டு தயாரிக்க மேற்கொள் ளப்பட்ட முயற்சி, பாதுகாப்பு அச்சுறுத் தல் நீடிப்பதை சுட்டிக்காட்டியிருந்தது.

வழமையாக நாடாளுமன்ற உறுப்பி னர்களுக்காக வழங்கப்படும் பாது காப்புப் பிரிவினர் மற்றும் ஆறு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கட மையில் ஈடுபட்டுவந்தனர். இந்நிலையில் தற்போது அதற்கு மேலதிகமாக 10 விசேட அதிரடிப்படையினர் அவரின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர். இதன்படி தற்போது 16 விசேட அதிரடிப்படையினர் சுமந்திர னின் பாதுகாப்புக் கடமையில் ஈடுப டுத்தப்பட்டுள்ளனர்.

சுமந்திரன் கலந்துகொள்ளும் தேர் தல் பரப்புரைகளுக்கு 5 மோட்டார் சைக்கிள்களில் செல்லும் 10 பேர் கொண்ட விசேட அதிரடிப்படையினர் பிரசாரக் கூட்டம் நடைபெறும் பகுதி களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுப டுகின்றனர்.

## விபத்தில் சிக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாகின.

கிளிநொச்சியில் இருந்து தேர்தல் நடவடிக்கை தொடர்பில் யாழ்ப்பாணம் வந்து மீண்டும் கிளிநொச்சிக்குத் தி ரும்பிச் சென்று கொண்டிருந்தபோதே அவர்கள் விபத்தில் சிக்கியுள்ளனர்.

விபத்தில் சுயேச்சைக் குழு 03 இன் தலைவரான சுந்தரலிங்கம் செல்வ குமார், வேட்பாளர் யோ.பியதர்சன் ஆகி யோரும், இவர்களுடன் இணைந்து பயணித்த த. டர்சிகன் என்பவருமே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## யாழ்.நகரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வணிகசூரிய தலைமையில் 250 படையினரின் பங் களிப்புடன் யாழ்.மாநகரைத் தூய்மைப் படுத்தும் பணி முன்னெடுக்கப்படுகின் றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் பணி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கோட் டைக்கு முன்பாக இடம்பெறும் பிரதான நிகழ்வுடன் நிறைவுபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரில் தெரிவு செய்யப்பட்ட 9 பிரதான வீதிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது இடங்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப்பொருள்களை அகற்றி நகரைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் இந்தப் பணி சுழற்சிமுறையில் முன்னெடுக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் கடந்த நல்லாட்சி அரசு நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோற் றம் பெறுவதற்கு இடமளித்துள்ளது

நல்லாட்சி அரசின் தலைவர்களுக்குத் தகவல் கிடைத்திருந்த போதிலும் உளவுத் துறை அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கிடைத்த முன்கூட்டிய எச்சரிக் கையை மறைத்ததன் மூலம் அப்பாவி மக்கள் பலர் உயிரிழக்க நேரிட்டது.

மாவட்டமொன்றை அபிவிருத்தி செய் வதைவிட முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வதே எமது பொறுப்பு. குருநாகல் என்பது நான்கு இராச்சியங்கள் இருந்த மிகவும் பலம் வாய்ந்த மாவட்டமாகும். எமக்கு நாட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வு உள் ளது. ஜனாதிபதி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நாடாளுமன்றமொன்று அவசியம். எப்பொழுதும் ஜனாதிபதி பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சியே அரசாங்கத்தை யும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் – என்றார்.

## தமிழரசைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் இன்று வியாழக்கிழமை மலரஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கான கட்சி, இந்தக் கட்சி ஒருபோதும் தனது நிலையிலிருந்து மாறக்கூடாது எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

நாங்கள் இருக்கின்ற இடம் தூய்மை யாக இருக்க வேண்டும். நாங்கள் வளர்க் கின்ற மரம் செழிப்பானதாக இருக்க வேண்டும். எங்களுடைய கொள்கைகள் நேர்மையானதாக இருக்க வேண்டும். நாங்கள் எடுக்கின்ற முடிவுகள் சரியா னதாக இருக்க வேண்டும் என்பதற்கா கவே போராட்டத்தை முன்னெடுத்துள் ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## வடக்கில் 2,327....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் கைப்பற்றப்பட் டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு 2,096 கிலோ கஞ்சா கடற்படையினரால் கைப் பற்றப்பட்டுள்ளது. எனினும் இவ்வருடம் இன்றுவரை 2,327 கிலோ கஞ்சா போதைப்பொருள் கடற் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளதைக் காணக் கூடிய தாக உள்ளது

எனினும் இது தொடர்பில் சமூக மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமான ஒரு விடயமாகும். இதனை கருத்தில்கொண்டுசிவில் அமைப்புக்கள், மத குருமார் மற்றும் சமூக ஆர்வலர்கள் வடக்கு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற் படுத்த முன்வர வேண்டும்

ஏனெனில் இளம் பராயத்தைச் சேர்ந் தவர்கள் – அதாவது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் இளைஞர்கள் – கூடுத லாக இந்தப் போதைப் பொருளுக்கு அடிமையாகி வருகின்றமையை அவதா னிக்க முடிகின்றது.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய அவசியம் அனைத்து சமூக மட்டப் பிரதி நிதிகளுக்கும் உள்ளது. எனினும் கடற் படையினரால் பல்வேறுபட்ட விழிப்பு ணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அதேபோல சமூகமட்ட அமைப்புக ளும் போதைப்பொருள் பாவனை யால் ஏற்படும் விபரீதம் தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதன் மூலமே போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்த முடியும் என வடக்குக் கடற்படை தலை மையகத் தினால் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## மின் கட்டணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தார்.

இந்த நிவாரணங்கள் குறையாது எனவும், 25 வீதம் விலைப்பட்டியல் குறையும்எனவும்,மின்துண்டிக்கப்படாது எனவும், நிலுவைப் பணம் அறவிடப்பட மாட்டாது எனவும் பந்துல குணவர்தன கூறினார்.

இதனால் எவ்வளவு நட்டம் ஏற்பட் டாலும் இலங்கை மின்சார சபை அதனை ஏற்றுக்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள் ளார் எனவும், விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சர் அது தொடர்பில் தமது அதிகாரிகளுடன் நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனவும், எவ்வாறாயி னும் எதிர்காலத்தில் விலைப்பட்டியல் குறையுமே தவிர அதிகரிக்காது எனவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன விளக்க மளித்துள்ளார்.

## ஐ.தே.கவிலிருந்து விலகியோர் மீது நடவடிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி வேறு அரசியல் கட்சிகளுக்கு சென்றவர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அக் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பா ளரான நவீன் திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

நுவரெலியாவில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் பேசிய அவர்–

ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் 100 ஆண்டுகள் நாட்டில் இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது நற்பெ யரைப் பாதுகாக்க கடுமையான நடவடிக் கைளை எடுக்கும். ஐக்கிய தேசியக் கட் சியில் இருந்து விலகி வேறு அரசியல் கட்சிகளுக்கு சென்றவர்கள் சம்பந்த மாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

## யாழ். மாநகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் கூட்டமைப்பு சார்பிலான பதில் முதல்வர் ஈசன், ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்க ளுடன் தொடர்ந்து கூட்டத்தை நடத்தினார்.

மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று இடம்பெறுவதாகக் கடந்த 6ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இது மாநகர கட்டளைச் சட்டத்துக்கு அமைவான போதுமான காலப் பகுதியா என மாநகர சபை உறுப்பினர் ம.அருள்குமரன் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக் கும்போதே செய லாளர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இந்த விடயம் தொடர்பில் செயலாளர் மேலும் தெரிவிக்கையில் –

மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரகா ரம் போதுமான காலப் பகுதி இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கின் றேன். இருப்பினும் 10ஆம் திகதியே கூட்டம் இடம்பெறுவதாக இருந்த நிலையில் ஓர் உறுப்பினரின் வேண் டுகோளின் பேரில் மாற்றம் செய்யப்பட்டது. இருப்பினும் சபை ஏற்றுக்கொண்டால் கூட்டத்தை நடத்தலாம் – என்றார்.

கட்டளைச் சட்டத்துக்கு முரணாகவே அறிவித்தல் அமைகின்றது எனச் செய லாளரே கூறுவதால் இன்றைய தீர்மா னங்களும் கேள்விக்கு உட்பட்டவை என் றதன் அடிப்படையிலும் இந்தச் சபையில் இருந்து நான் வெளி நடப்புச் செய்கின் றேன் என உறுப்பினர் அருள்குமரன் சபையில் இருந்து வெளியேறிபோது மேலும் 12 உறுப்பினர்களும் சேர்ந்து வெளிநடப்புச் செய்தனர்.

இருந்தபோதும் பதில் முதல்வர் உட் பட 18 பேர் சபையில் இருந்த நிலையில் தொடர்ந்து கூட்டம் இடம்பெற்றது.

## வாள்வெட்டுக் கும்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்வேலி கரந்தனில் உள்ள அந்த வீட்டின் வாழைத்தோட்டத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று, வாள்கள் மூன்று, மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, இரா ணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்டவை கைப்பற்றப் பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட் டனர்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப் புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கை யில் சந்தேக நபர்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் பிரதான சந்தேக நப ரான மருதனார்மடம் ஜெகன் அல்லது கைலாயம் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றச்செயலுக்குத்தயா ராகப் பயன்படுத்திய வீடு முற்றுகையி டப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தை சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஷ் எனும் சுற்றுச் சூழல் அதிகார சபை உத்தியோகத்தர் மீதே நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப் பட்டது.

அந்த உத்தியோகத்தர் வழமை போன்று நேற்று காலை கடமைக்காக வந்தபோது, அவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் வந்த நால்வர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழி மறித்து அவர் மீது தாக்குதலை மேற் கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தி யோகத்தர் யாழ். போதனா வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில், தெரி வத்தாட்சி அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து மாவட்ட செயலகம் தெரி வத்தாட்சி அலுவலகம் எனும் ரீதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாது காப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு இருந்தன.

இந்நிலையிலையே பலத்த பாது காப்புக்கு மத்தியில் உள்ள மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வன்முறை கும்பல் மோட்டார் சைக்கிள் வந்து வாள் வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## அர்த்தமேயற்ற குற்றச்சாட்டு

'படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன் கோவில்' என்பார்கள். அப்படி நடந்து கொள்வதில் அர்த்தம் இல்லை. அதுவும் அரசியலில் அப்படிச் செயற்படுவது பெரும் அபத்தம். ஆனால் பெரும்பாலும் அரசியலில் பலரும் அப்படித்தான் செயற்படுகின்றார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட அவ்வாறுதான் செயற்படுகின்றார் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

யார் மீது அவர் குற்றம் சுமத்துகின்றாரோ - பாரதூரமான குற்றங்களைப் போடுகின்றாரோ - அவர்களோடுதான் அவர் கூட்டுச் சேர்ந்திருக்கின்றார். வரும் தேர்தலில் அப்படிக் குற்றம் சுமத்தப்படுபவர்களைத் தமது அணியில் சேர்த்துத் தம்முடன் நாடாளுமன்றுக்குக் கூட்டிச் செல்லவும் அவர் முயல்கின்றார்.

இது வாக்காளரின் - பொது மக்களின் - காதில் பூச்சுற்றும் வேலையன்றி வேறில்லை.

பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து ஒழித்தோம் என்று மார் தட்டும் மஹிந்த ராஜபக்ஷ தங்களுக்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசு பயங்கரவாத மீளுருவாக்கத்துக்கு இடமளித்து விட்டது என்று விசனித்திருக்கின்றார்.

குருநாகல் கடுகம்பொலவில் நடந்த சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர் -

*"பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டைப் பயங்கவாதத்தில் இருந்து மீட்டிருந்தோம். ஆனால் நல்லாட்சி அரசு பயங்கரவாதம் மீளத் தோற்றம் பெற இடமளித்து நாட்டைச் சீரழித்து விட்டது. நல்லாட்சி அரசின் தலைவர்களுக்குத் தகவல் கிடைத்திருந்த போதிலும் உளவுத்துறை அதிகாரிகளை (பணியிலிருந்து) வீட்டுக்கு அனுப்பி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முற்கூட்டியே கிடைத்த எச்சரிக்கைகளை மறைத்தமை மூலம் அப்பாவி மக்கள் பலர் உயிரிழக்கக் காரணமாகி விட்டது"* என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த இக்குற்றச்சாட்டு ஒன்றும் புதியதல்ல. இக்குற்றச்சாட்டுத் தொடர்பில் இதுவரை யாரும் தண்டிக்கப்படவோ, பொறுப்புக் கூறவோ இல்லை. எனினும் இக் குற்றச்சாட்டில் உள்ள பாரதூரமான தன்மை, அதில் உள்ள நீதி, நியாயங்கள் எல்லாம் நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

நல்லாட்சி அரசின் ஆள்களை நிராகரித்து, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெருவாரியான தென்னிலங்கை மக்கள் மொட்டுத் தரப்புக்கு வாக்களித்தமைக்கு இக் குற்றச்சாட்டின் அடிப்படையில் மொட்டுத் தரப்பு கொண்டு சென்ற பிரசாரமும், அதை அந்த மக்கள் முழு அளவில் நம்பியமையும் கூடப் பிரதான காரணங்கள்தான்.

பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டு தவறானதல்ல. ஆனால் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதுதான் கேள்வி.

தன்னுடைய அரசியல் தேவைக்காக பொத்தம்பொதுவில் 'நல்லாட்சி அரசு' என்று சாடுகிறார் மஹிந்தர்.

ஆனால் நல்லாட்சி அரசில் இந்த விடயத்துக்குப் பொறுப்பேற்க வேண்டியவர் - தனித்தும் முழுமையாகவும் பொறுப்பேற்க வேண்டியவர் - முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான்.

அச்சமயத்தில் பாதுகாப்புத்துறை முழு அளவில் அவரது கட்டுப்பாட்டிலும் தலைமையிலும்தான் இருந்தது. அது மட்டுமல்ல, அந்தப் பாதுகாப்புத்துறை விடயங்களில் இருந்து ஏனைய பொறுப்புள்ள அரசியல் தலைமைகளைத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி, வெட்டி, புறம் ஒதுக்கி, உதாசீனப்படுத்தி, தள்ளி வைத்திருந்தவர் அவர்தான். ஆகவே பாதுகாப்புத்துறையில் இவ்விடயம் தவறான விதத்தில் அரசியல் தலைமைகளால் கையாளப்பட்டிருக்குமானால் அதற்கு முற்றும் முழுதாகப் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயக் கடப்பாட்டில் இருப்பவர் மைத்திரிதான்.

பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்கே அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்படுவதில்லை. அப்போதைய பொலிஸ்மா அதிபர், பிரதமரின் தெரிவு என்று நினைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் பாதுகாப்பையும், பாதுகாப்புத் தலைவிதியையும் நிர்ணயிக்கும் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்கு பொலிஸ் மா அதிபரையே அழைக்கக் கூடாது என்று பணிப்புரை விடுத்திருந்தவர்.

தானும் தன்னைச் சுற்றிய ஒரு விதூஷகக் கும்பலையும் வைத்துக் கொண்டு நாட்டின் பாதுகாப்பையே குட்டிச் சுவராக்கிக் கெடுத்த மட்ட ரகத் தலைவர் மைத்திரிபால சிறிசேன.

தமது மொட்டுக் கட்சியில் அவரையும் நாடாளுமன்ற வேட்பாளராக அணி சேர்த்துக் கொண்டு , அவருக்காவும் தேர்தல் பிரசாரம் செய்தபடி நல்லாட்சி அரசின் பாதுகாப்புக் கவனிப்புத் தொடர்பான சீத்துவத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விமர்சிக்கின்றமை, திருடனுடன் கூட்டு வைத்துக் கொண்டு திருட்டை மோசமாக விமர்சிக்கும் அபத்தப் பேச்சுக்கு ஒப்பானதாகும்.

# மூன்று பேருக்கு மேற்படாமல் சென்று வீடுகள் தோறும் பிரசாரம் செய்யலாம்

## தேர்தல் விதிகள் பற்றிய விவரங்கள் வெளியாகின மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை

எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், 1981 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் சட்டம், பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் கொரோனா அச்சம் காரணமாக தொற்று நீக்கல் சட்டவிதிகளுக்கு அமைய கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் வேட்பாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் எவரும் அவர் சார்பில் வீடுகளுக்குச் சென்று பிரசாரங்களில் ஈடுப்பட முடியாது எனவும் வேட்பாளரின் உறவினர்கள் அல்லாத ஏனையவர்கள் இவ்வாறு பிரசாரத்தில் ஈடுபடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வேட்புமனுத் தக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னரான ஒருவாரம் காலம் வரையில் எவ்வித விழாக்களிலும் வேட்பாளர்கள் கலந்துக் கொள்ளக்கூடாது என்பதுடன் சமய நிகழ்வுகளில் அரசியல் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்க கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மூன்று பேர் மாத்திரமே வீடுகளுக்குச் சென்று பிரசாரங்களில் ஈடுப்பட முடியும் என்பதுடன் வேட்பாளர்களின் கட்சியின் கொள்கைத் திட்டம், சின்னம், அவர்களது போட்டி இலக்கம், புகைப்படம், துண்டுப்பிரசுரம் மற்றும் சுவரொட்டிகளை வாக்காளர்களின் இல்லங்களுக்குச் சென்று கையளிக்க முடியும் என்றாலும் வாகனங்களில் அதனை காட்சிப்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வீடுகளுக்குச் சென்று தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும்போது, குறித்த வீட்டு உறுப்பினர்களுக்கு இடையூறை ஏற்படுத்தாத வகையில் பிரசாரங்களை மேற்கொள்வதுடன் ஒலிபெருக்கிகளை உபயோகிக்கக் கூடாது எனவும் வேட்பாளர்களின் சின்னம், இலக்கம், புகைப்படம் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தும் வகையிலான ஆடைகளை அணிந்து செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தொற்று நீக்க சட்டவிதிகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விதிகளுக்கமைய காலை 7 மணி தொடக்கம் இரவு எட்டு மணிவரையிலேயே பிரசாரங்களில் ஈடுப்பட முடியும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைவிட, வேட்பாளர்களின் கட்சி, கொடி மற்றும் பதாதைகளை பிரசாரக் கூட்டம் இடம்பெறும் தினத்திலும் கூட்டம் நடைபெறும் இடத்திலும் மாத்திரமே காட்சிப்படுத்த முடியும் என்பதுடன் வேட்பாளர், அவரின் சொந்த வாகனத்தில் அவரது கட்சியின் சின்னம், இலக்கம் மற்றும் கட்சியின் கொடியை காட்சிப்படுத்தலாம். ஆனால் வாகனத்தின் பொதுவான நிறத்தை மாற்றும் வகையிலோ பின்பகுதி கண்ணாடியை மூடும் வகையிலோ காட்சிப்படுத்தக் கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்காகப் பொலிஸாரிடம் அனுமதி பெறவேண்டும் எனவும் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தாமல் மேற்கொள்ளும் சிறியளவிலான கூட்டங்களுக்கு அனுமதி பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒருவாரம் கடக்கும் வரையில் எந்தவித கூட்டங்களையும் நடத்தக் கூடாது என்ற அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஓகஸ்ட் 2ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படக் கூடாது என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

அத்துடன், தேர்தல் நடைபெறும்போது வேட்பாளரை ஆதரிக்கும் வகையில் பொது இடங்களில் அவரது புகைப்படம், சின்னம், இலக்கம் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதோ துண்டுப் பிரசுரம் வழங்குவதையோ தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வேட்பாளர்களுக்கு ஆதவளிக்கும் வகையில் அச்சிடப்படும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளில் அச்சு நிலையத்தினதும், அவற்றில் கருத்து தெரிவிப்பவர்களினதும் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் இவ்வாறு பதிவுச் செய்யப்படாத துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளை வேட்பாளர் இன்றி வேறொருவர் வழங்கினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட, ஸிசிம் திரை பொருத்தப்பட்ட வாகனங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களை கூட்டங்கள் இடம்பெறும் இடங்களில் மாத்திரமே நடத்த முடியும் எனவும் வீதிகளில் பயணிக்கும் போது பிரசாரம் செய்யமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் காலப்பகுதியில் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பேரணிகளை நடத்தவோ அதனை ஒழுங்கு செய்வதையோ தவிர்த்துக் கொள்ளவதுடன் மத வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்குறித்த அறிவுறுத்தல்களை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாற்று அரசியல் தலைமைக்கு தமிழர்கள் ஆதரவு தர வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

மன்னார்,ஜூலை09

புதிய மாற்று அரசியல் தலைமைக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், வடக்கு – கிழக்கில் 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கான' மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்றது.

தமிழ் மக்களுக்கு உறுதியான, நேர்மையான அரசியல் தலைமையும், அரசியல் வெற்றிடமும் நீண்ட காலமாக ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலமாக ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் வகையில் விக்னேஸ்வரன் தலைமையிலான 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி' நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் அதிகளவான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும்.

மக்கள் எங்களுக்கு வழங்குகின்ற ஆதரவின் ஊடாக நிச்சயமாக நாங்கள் இந்த தேர்தலில் அதிகளவான ஆசனங்களை பெற்று இத்தேர்தலுக்கு பிற்பாடு நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்ற எமது மக்களுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகின்ற அனைத்து முயற்சிகளையும் எடுப்போம்.

தமிழ் மக்கள் நிச்சயமாக ஆணையை எமக்கும் வழங்கு வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# கடலில் மூழ்குகிறது தமிழகத் தீவு ஒன்று!

தமிழகத்தில் உள்ள மன்னார் வளைகுடாவில் இரண்டு தீவுகள் கடலில் மூழ்கிவிட்ட சூழலில், மேலும் ஒரு தீவு வேகமாகக் கடலில் மூழ்கி வருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர். இவ்வாறு தீவுகள் அடுத்தடுத்து மூழ்குவது, வர இருக்கும் ஒரு பேராபத்துக்கான சமிக்ஞை என்றும் அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது: கடல் வாழ் தேசிய பூங்காவாகத் தமிழக அரசாலும், கடல் வாழ் உயிர்க்கோளக் காப்பமாக இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட இந்தியாவின் ராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி வரையான 10ஆயிரத்து 500 சதுர கிலோ மீற்றர்களைக் பரப்பளவை கொண்ட மன்னார் வளைகுடாப் பகுதியில் 4ஆயிரத்து 223 கடல் வாழ் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதில் அழிந்து வரும் இனமான கடல் பசு, 117 வகை பவளப்பாறைகள், 14 வகை கடல் புற்களும் அடங்குகின்றன. இந்த மன்னார் வளைகுடா பகுதியில், சிங்கில் தீவு, குருசடை தீவு, புள்ளிவாசல் தீவு, பூமரிச்சான் தீவு, மனோலிபுட்டி தீவு, மனோலி தீவு, முசல் தீவு, முள்ளி தீவு, வாழை தீவு, தலையாரி தீவு,பூவரசன்பட்டி தீவு,அப்பா தீவு, வான்தீவு, காசுவார் தீவு, காரைச்சல்லி தீவு, விலங்குசல்லி தீவு, உப்புத் தண்ணி தீவு, புலுவினிசல்லி தீவு, நல்ல தண்ணி தீவு, ஆனையப்பர் தீவு, வாலிமுனை தீவு என 21 தீவுகள் உள்ளன.

இந்தத் தீவுகள் கடலில் மூழ்கி வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் காலநிலை மாற்றம். அதிகளவில் பவளப்பாறைகள் சுரண்டப்படுவது அடுத்த காரணம். ஏற்கெனவே இரண்டு தீவுகள் மூழ்கிவிட்ட சூழலில், கடந்த ஒரு தசாப்தமாக வான் தீவும் வேகமாக மூழ்கி பல்வேறு ஆய்வுகளில் தெரிய வந்திருக்கிறது.

# தப்பி ஓடிய கொரோனா நோயாளி தேடிக் கண்டுபிடிக்கப்பட்டார்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கொரோனாத் தொற்றுடைய நபர் ஒருவர் தப்பியோடிய நிலையில் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தமிழகத்தின் முண்டியம்பாக்கம் அரச மருத்துவமனையில் நடந்தது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

வானூர் அருகேயுள்ள தென்கோடிப் பாக்கத்தைச் சேர்ந்த 45 வயதான ஒருவர் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஜூன் மாதம் 22ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். ஜூலை மாதம் 6ஆம் திகதி இரவு அந்த நபர், மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றார். மருத்துவமனை நிர்வாகம் அளித்த தகவலின்பேரில் பொலிஸார் அவரது வீட்டுக்குச் சென்று அவரைத் திரும்பவும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். மன இறுக்கத்தில் இருந்து வந்த அவர் நேற்று முன்தினம் இரவு மீண்டும் தப்பி ஓடினார்.

பொலிஸார் அவரை மறுபடியும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். தற்போது அவரை மருத்துவமனை ஊழியர்கள் கண்காணித்து வருகின்றனர். அவருடன் தொடரபில் இருந்த குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# விகாஸ் துபே கைது! 2பேர் சுட்டுக் கொலை





இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் கான்பூரில் பொலிஸ் அதிகாரிகள் 8பேரை விகாஸ் துபே என்கிற தனிநபர் (ரவுடி) தலைமையிலான ஆயுததாரிகள் சுட்டுக் கொன்ற சம்பவம் அண்மையில் நடந்தது. அந்த வழக்கில் தேடப்பட்டு வந்த குற்றவாளியான விகாஸ் துபே இன்று இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். விகாஸ் துபே கைது செய்யப்பட்ட தகவலை மத்திய பிரதேச மாநில உள்துறை அமைச்சர் நரோத்தம் மிஸ்ரா உறுதிப்படுத்தினார். அத்தோடு விகாஸ் துபேவுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டதாகவும், இரண்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

### பின்னணி

கான்பூரைச் சேர்ந்த விகாஸ் துபே என்கிற குற்றங்களுடன் தொடர்புடைய நபரைக் கைது செய்வதற்காகக் கடந்த 3ஆம் திகதி அதிகாலையில் பொலிஸார் தமது வாகனத்தில் விகாஸ் துபே இருக்கின்ற பகுதிக்குச் சென்றனர். 60வரையான குற்ற வழக்குகளில் அவர் தேடப்படுகிறார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

குற்றவாளியின் இருப்பிடத்தை அண்மித்த பொலிஸாரின் வகனத்தை ஜே.சி.பி. வாகனத்தால் தடுத்து நிறுத்திப் பொலிஸ் அதிகாரிகளைக் குறி வைத்துச் சராமாரியான துப்பாக்கிச் சூடுகளைக் குற்றவாளித் தரப்பு நடத்தியது. அதில் எட்டுப் பொலிஸார் உயிரிழந்தனர். இதையடுத்துத் தாக்குதல் நடத்திய குற்றவாளிகளையும் விகாஸ் துபேயையும் பொலிஸார் தேடி வந்தனர். விகாஸ் துபேயின் வீடு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

## தந்தை, மகன், சகோதரர் சுட்டுக்கொலை இந்தியா - காஷ்மீர் பகுதியில் பயங்கரம்

இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரின் பந்திப்போரா மாவட்டத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் மாவட்டத் தலைவர் வாசிம் அஹ்மத் பாரி, அவரது தந்தை பஷீர் அகமது, சகோதரர் உமர் பஷீர் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆயுததாரிகள் சிலரால் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்தப் பிரதேசப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டுக்கு அருகில் இவர்கள் மூவரும் சொந்தமாகக் கடை ஒன்றை நடத்தி வந்தார்கள். இவர்கள் மூவரும் நேற்று மாலை அந்தக் கடையில் இருந்தபோது இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

வாசிம் அஹ்மத் பாரியை நோக்கி துப்பாக்கியால் கண்மூடித்தனமாகச் சுடப்பட்டு அவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார் என்றும் இந்தத் தாக்குதலில் அவரது தந்தை பஷீர் அகமது, சகோதரர் உமர் பஷீர் ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சையளித்த போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் நடந்த இந்த சம்பவம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி விசாரித்ததார் என்றும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்ததார் என்றும் பிரதமர் அலுவலக அதிகாரி ஜிதேந்திர சிங் தெரிவித்தார். அத்தோடு காஷ்மீரில் தேசியவாதத்தின் குரலை நசுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இந்தத் தாக்குதல் என்று

## மீனவர்கள் திடீர் போராட்டம் சுகாதார ஊழியர்கள் விரட்டியடிப்பு



தூத்துக்குடியில் மீனவப் பகுதியான திரேஸ்புரத்தில் 40க்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முறையான சிகிச்சை, உணவு வழங்கப்படவில்லை எனக் கூறி, அங்கு 200க்கும் மேற்பட்டோர் நேற்றுக் காலை மறியலில் ஈடுபட்டனர்.

அங்கு வைக்கப்பட்டிருந்த வீதித் தடுப்புகளைத் தூக்கி வீசினர். கொரோனா பரிசோதனைக்காக வந்த சுகாதாரப் பணியாளர்களை விரட்டியடித்தனர். இதையடுத்து, மருத்துவமனையில் குறைபாடுகள் இருந்தால் நிவர்த்தி செய்யப்

யளித்தனர். பேச்சு நடத்திய பின்னர் மக்கள் கலைந்து சென்றனர்.

இதேபோல், திரேஸ்புரம் நாட்டுப்படகு மீனவர் பொதுப் பஞ்சாயத்துத் தலைவர் ரொபர்ட் தலைமையில் 100 மீனவர்கள் மீன்வளத்துறை இணை இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

நாட்டுப் படகு மீனவர்களைக் கடலுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். கொரோனாத் தொற்றின் தாக்கம் குறைந்ததும் மீன்பிடிக்கச் செல்லலாம் என அதிகாரிகள் கூறினர். இதையடுத்து மீனவர்

## நேருக்கு நேர் கார்கள் மோதல் 2பேர் சாவு 5 பேருக்குக் காயம்

இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதியதில் இருவர் உயிரிழந்தனர். 5பேர் காயங்களுக்கு உள்ளாகினர். கரூர் மாவட்டத்தின் தென்னிலைப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் அதிகாரி செந்தில்குமார் (வயது 43) திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவிலில் இருந்து அதிகாலை மகிழுந்தில் உறவினர்கள் சிலருடன் சின்னதாராபுரம் நோக்கிப் பயணித்துள்ளார். அப்போது திருச்சியில் இருந்து திருப்பூர் நோக்கிப் பயணித்த மற்றொரு மகிழுந்தும் இவரது மகிழுந்தும் நேருக்கு நேர் மோதின.

இதில் செந்தில்குமார், மற்றைய மகிழுந்து ஓட்டுநர் சந்தோஷ்குமார், அதில் பயணம் செய்த திருப்பூரைச் சேர்ந்தவர்கள் காயமடைந்தனர். பொலிஸ் அதிகாரியின் மகிழுந்தில் பயணித்த இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதில் படுகாயமடைந்த 9 வயதுச் சிறுவன் ஒருவன் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்படுகிறது.



# கறுப்பினத்தவருக்கான போராட்டத்தால் அரபு நாடுகளில் இனவெறி அதிகரிப்பு!



அமெரிக்காவில் பொலிஸாரால் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரான ஜோர்ச் ஃபிளாய்ட்டுக்கு நீதி கோரிப் பல நாடுகளிலும் போராட்டங்கள் தொடர்ந்தன. இந்தப் போராட்டங்களின் எதிரொலியாக அரபு நாடுகளில் கறுப்பினத்தவர்களுக்க எதிரான பாகுபாடுகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

லெபனானில் வீட்டுக்காப்பாளராகப் பணியாற்றிவந்த எதியோப்பியப் பெண் ஒருவர் திடீரென்று தனது வேலையிலிருந்து நிறுத்தபட்டுள்ளார். லெபனானைச் சேர்ந்த முதலாளியால் அந்தப் பெண் வீதியில் கைவிடப்பட்டுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

லெபனானில் எதியோப்பியாவைச் சேர்ந்த வீட்டுத் தொழிலாளர்கள் பலர் கொரோனாவால் எற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது தங்கள் முதலாளிகளால் கைவிடப்பட்டனர் என்றும் வீட்டுத் தொழிலாளர்களை முறைகேடாக நடத்துவதும் அரபு உலகில் நீண்டகாலமாகப் பிரச்சினையாக இருந்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்ற அதே நேரம் ஜோர்ஜ் ஃபிளாய்டின் கொலைக்குப் பிறகு ஏற்பட்ட இனவெறி குறித்த உலகளாவிய சலசலப்பு, அரேபியர்களிடையே இனவெறி குறித்துப் பரந்த விவாதத்தைத் தூண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரபு உலகில், மக்கள் பெரும்பாலும் கறுப்பின மக்களைக் குறிக்க இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்; என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் அண்மையில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட தென்மேற்குப் பகுதியிலுள்ள குமாமோட்டோ ப்ரிபெக்சர், ஹிட்டோயோஷி நகரில் வீதிகள் கட்டடங்கள் சிதைந்து வாகனங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. நபர் ஒருவர் அவ்வழியாகத் தனது மோட்டார் சைக்கிளை உருட்டிச் செல்கிறார்.



# தீப்பற்றி எரிந்தார் மெலனியா ட்ரம்ப்!



அமெரிக்காவின் முதல் பெண்மணி மெலனியா ட்ரம்பின் சிலை கடந்த 4 ஆம் திகதியன்று இரவு தீ விபத்துக்கு உள்ளானது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது: –

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனைவியும் அமெரிக்காவின் முதல் பெண்மணியுமான மெலனியா ட்ரம்பின் சிலை ஒன்று ஸ்லோவேனியாவில் உள்ள அவரது சொந்த ஊருக்கு அருகே உள்ளது.

மரத்தால் செய்யப்பட்ட அந்தச் சிலை 4 ஆம் திகதி இரவு தீ விபத்துக்கு உள்ளானது. மெலனியா ட்ரம்பின் சிலையை நிறுவிய அமெரிக்கக் கலைஞரான பிராட் டவுனி, அது எரிந்து முடிந்த பின்னர் அந்தப் பீடத்தில் இருந்து அதை அகற்றினார். இந்தச் சிலை அமெரிக்காவின் அரசியல் நிலைமை விவாதத்தை வளர்க்கும் என்று எண்ணியதாலேயே அவ்வாறு செய்தார் என்று அவர் தெரிவித்தார். வோஷிங்டனில் உள்ள மெலனியா ட்ரம்பின் அலுவலகம் இது குறித்து எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

# திடீரென உயிரிழந்தார் ஐவரி கோஸ்ட் பிரதமர்



ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டில் நடந்த அமைச்சரவைக் கூட்டமொன்றில் நோய்வாய்ப்பட்ட நிலையில் கலந்துகொண்ட அந்த நாட்டின் பிரதமரான அமாடோ கோன் கோலிபாலி அதற்குப் பின்பு உயிரிந்தார். இந்தச் சம்பவம் அங்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு மாதங்களாகப் பிரான்சில் தங்கியிருந்து இதய சிகிச்சை எடுத்துக் கொண்ட கோலிபாலி அண்மையில் தான் ஐவரி கோஸ்ட் திரும்பியிருந்தார்.

பிரதமரின் சாவால் அந்த நாடு துக்கத்தில் உள்ளதாக அதிபர் ஒட்டாரா தெரிவித்துள்ளார். அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் கோலிபாலி உடல்நலன் குன்றியிருந்ததால், அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கு அவர் இறந்துவிட்டதாகவும் அதிபர் தெரிவித்தார்.

பிரதமர் கோலிபாலியின் சாவு அந்நாட்டில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சூழலில், அங்கு நடக்கவிருக்கும் அதிபர் தேர்தல் குறித்தும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் அந்த நாட்டில் நடக்கவுள்ள அதிபர் தேர்தலில், ஆளுங்கட்சி வேட்பாளராக 61 வயதான அவர் போட்டியிடவிருந்தார். தற்போதைய அதிபரான அலசானி ஒட்டாரா மூன்றாவது முறையாக அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தனக்கு விருப்பமில்லை என்று கூறியிருந்தார்.

# கொரோனா நோயாளிகளுக்கு மூளை தொடர்பான நோய்கள்

கொரோனா அறிகுறிகள் இலேசாக இருக்கின்ற நிலையிலுள்ள நோயாளிகளுக்கு மூளை அழற்சி, நரம்புப் பாதிப்பு, டெலிரியம் போன்ற மூளை தொடர்பான நோய்கள் ஏற்பட்டுள்ளதை லண்டனில் உள்ள மருந்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் நேரடியான தாக்கத்தால் இந்த நோய்கள் ஏற்படாது ஆனால், உடலில் உள்ள ஆரோக்கியமான செல்களை அதிகமான நோய் எதிர்ப்புச்சக்தி முறை தாக்குவதால் இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது என்று லண்டன் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மருத்துவ இதழ் ஒன்றில் இது குறித்த கட்டுரையை



லண்டன் மருத்துவ ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். வைரஸ் மற்றும் பாக்டீரியாத் தாக்குதலில் மூளை அழற்சி மற்றும் முதுகுத் தண்டுவடத்தில் செல்லும் நரம்புகளில் பாதிப்பு ஏற்படும்.

இந்த நிலையிலேயே கொரோனாவின் ஆரம்ப நிலையில் இத்தகைய மூளை சார்ந்த நோய்கள் உருவாகுவதைப் பிரிட்டனில் உள்ள யூனிவர்சிடி காலேஜ் ஆப் லண்டன்(யுசிஎல்) கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், ஆய்வாளர்கள் இந்த கண்டுபிடித்துள்ளனர்.கொரோனாவால்கடுமையாகப்பாதிக்கப்படாதவர்களே இதுபோன்ற நரம்பியல் நோயால் தற்போது அதிகம்

# பாகிஸ்தானில் இந்துக் கோவில் கட்டுவதற்கு தடை கோரப்பட்டது

## நீதிமன்றம் மறுப்பு



பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்தில் இந்துக் கோவில் கட்டுவதற்குத் தடை விதிக்கக் கோரி இஸ்லாமாபாத் உயர் நீதி மன்றத்தி஗்நீல் முஸ்லிம் லீக் காயித் கட்சி மனுத் தாக்கல் செய்தது. அந்த மனுவை உயர் நீதிமன்ற நீதிபதி அமீர் பாருக், தள்ளுபடி செய்தார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இஸ்லாமாபாத்தில் உள்ள எச்9 பகுதியில் 20ஆயிரம் சதுரடியில் இஸ்லாமாபாத் இந்துப் பஞ்சாயத்து என்ற அமைப்பின் சார்பில் இந்தக் கோவில் கட்டப்படுகிறது. இதற்காக கடந்த 2 வாரங்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டப்பட்டது. பாகிஸ்தானின் முஸ்லிம் லீக் காயித் கட்சி இந்தக் கோவிலைக் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இது தொடர்பாக அந்தக் கட்சியை சேர்ந்த ஒரு சிலர் இந்துக் கோவில் கட்டுவதற்கு தடை விதிக்கக் கோரி இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். அந்த மனுவில் அவர்கள் கோவில் கட்டுவதற்கான நிலத்தைத் மூலதன மேம்பாட்டு ஆணையகம் ஒதுக்குவதை நிறுத்த வேண்டும் எனவும், இஸ்லாமாபாத் இந்து பஞ்சாயத்து அமைப்புக்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி இருந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி அமீர் பாருக், இந்துக் கோவில் கட்டுவதற்கு தடை விதிக்க முடியாது எனக் கூறி அந்த மனுவை தள்ளுபடி செய்தார். மேலும் நிலத்தை யாருக்கு எதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை மூலதன மேம்பாட்டு ஆணையகமே முடிவு செய்யும் என்றும் அதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் நீதிபதி தெரிவித்தார்.

# ‘அம்பன்’ புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு

‘அம்பன்’புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்று நஷ்டஈடு வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் யாழ். மாவட்டத்தில் வீசிய அம்பன் புயலால் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வாழைச் செய்கை மற்றும் பப்பாசிச் செய்கை முற்றாக சேதமாகியிருந்தன.

இதனால் இந்தப் பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நஷ்டத்தை எதிர்கொண்டிருந்தனர். இதையடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்த விவசாயிகள் தமது பயிரழிவுக்கான நஷ்ட ஈடுகளைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் விவசாயிகளின் பாதிப்புக்களை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிப்புக்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்வார் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மே மாதம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தப் பயிரழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை முன்வைத்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை மேற்படி அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க அனுமதி அளித்திருந்தது.

இந்நிலையில் இதற்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு விவசாய அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்தவ அமைச்சு ஆகியன நிதி இல்லை எனத் தெரிவித்திருந்தன.

இதையடுத்து நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுசென்றமையை அடுத்து அதற்கான நிதியை வழங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் நடத்துனரின் இடமாற்றத்தை எதிர்த்து இ.போ.ச. ஊழியர் 3 மணி நேரம் பணிப்புறக்கணிப்பு!







(கி.வசந்தரூபன்)

நடத்துனரின் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் இன்று காலை 5.30 மணி தொடக்கம் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு காலை 8.30 மணியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையில் கடமையாற்றும் நடத்துனர் கடந்த 03.07.2020 பருத்தித்துறைப் பகுதிக்கு இடமாற்றப்பட்டிருந்தார். அவரின் இடமாற்றம் நடத்துனரைப் பழிவாங்கும் செயற்பாடு எனத் தெரிவித்து இ.போ.ச. வவுனியா சாலை ஊழியர்கள் காலை 5.30 மணி தொடக்கம் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக பயணிகள் சிரமத்தினை எதிர்கொண்டிருந்த போதிலும் வெளிமாவட்ட இ.போ.ச பஸ்கள் , தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தமையினால் பயணிகளுக்கு பெரியளவில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை

அடுத்த பத்து நாள்களுக்குள் இப்பிரச்சினைக்குரிய தீர்வினைப் பெற்றுத்தருவதாக இ.போ.ச வவுனியா சாலை முகாமையாளர் ஷாகீர் உத்தரவாதம் அளித்தமையினையடுத்து இ.போ.ச வவுனியா சாலை ஊழியர்களின் போராட்டம் காலை 8.30மணியுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இ.போ.ச.வவு னியா சாலையின் போக்குவரத்துச் சேவைகள் வழமைக்கு திரும்பி. (உ-100)

# மோ. சைக்கிளில் இருந்து திருடப்பட்ட நகையும் பணத்தில் ஒரு பகுதியும் மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜுலை10

கொக்குவில் மேற்குப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் களவாடப்பட்ட கைப் பையில் இருந்த பணத்தில் ஒரு பகுதி மற்றும் ஒன்றரைப் பவுண் மோதிரம் என்பன உரியவர்களின் விடா முயற்சியினால் நேற்று முன்தினம் மீட்டெடுக்கப்பட்டன.

கொக்குவில் மேற்கு , ஆனைக்கோட்டை வீதியில் கேணியடியை அண்டிய பகுதியில் வசிக்கும் – தனியார் காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்றும் – குடும்பப் பெண்மணி ஒருவர் கடந்த 30 ஆம் திகதி 8 மணியளவில் தனது கைப் பையை மோட்டார் சைக்கிளில் கொழுவியவாறு பணிக்கு புறப்படத் தயாரான சமயம் மோட்டார் சைக்கிள் ஆவணத்தை எடுக்கவில்லை என்ற ஞாபகம் வரவே வீதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டின் உள்ளே சென்று சில நிமிட இடைவெளியில் ஆவணத்தை எடுத்து வந்துள்ளார்.

இவ்வாறு ஆவணத்தை எடுத்து வந்தவர் மோட்டார் சைக்கிளில் இருந்த கைப் பையை காணாது பதறிய நிலையில் வீதியால் பயணித்தவர்களிடம் தேடியபோதும் கைப் பை கிடைக்கவில்லை. குறித்த பையில் ஒரு லட்சம் ரூபா பணமும், ஒரு தங்கப்பவுண் மோதிரமும் இருந்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதோடு அப் பகுதியில். இருந்த மறைகாணி (சீ.சீ.ரி கமரா) மூலம் தேடும் பணிகள் இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற முதல் முயற்சியில் பையும் பையில் இருந்த கைத் தொலைபேசியையும் மீட்ட உறவுகள், அதனை வைத்திருந்த இரும்பு வியாபாரி வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பை இருந்து மீட்கப்பட்ட பகுதியை அண்டிய இடத்தில் தேடுதல் நடத்தியதில் இரு சீ.சீ.ரி கமராக்கள் அருகில் பொருத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அவ்விரு கமராவினையும் பரிசோதித்தவேளையில் ஓர் குடும்பப் பெண்மணியே துவிச்சக்கர வண்டியில் வந்து பையை வீசும் காட்சி தில் தெளிவாக இனம்காணப்பட்டதோடு அந்தப் பெண்ணின்முகமும்அடையாளம்காணப்பட்டது.

கமரா மூலம் அடையாளம் காணப்பட்டவரின் புகைப்பட உதவியுடன் பெண்மணியின் வீடு கண்டறியப்பட்டு நேரில் சென்ற சமயம் குறித்த பையில் இருந்ததாகத் தெரிவித்து 41ஆயிரத்து 500ரூபா பணமும் ஒரு பவுண் மோதிரத்தையும் உரியவர்களிடம் மீள வழங்கியுள்ளார் அவர்.

இருப்பினும் பையில் ஒரு லட்சம் ரூபா இருந்தமை தொடர்பில் தொடர்ந்தும் சர்ச்சை நீடிக்கின்றது. பறி கொடுத்தவரின் உடன் பிறப்புக்களின் விடா முயற்சியின் பயனாக இழந்த பொருளும் பணத்தில் ஒரு பகுதியும் மீளக் கிடைத்துள்ளன.

# மாமாங்கம் உற்சவம் சனியன்று ஆரம்பம்

மட்டக்களப்பு, அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கோவில் வருடாந்த மகோற்சவம், நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இம்மாதம் 20ஆம் திகதி ஆடி அமாவாசைத் தீர்த்ததுடன் நிறைவு பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிலையில், சுகாதாரத்திணைக்களத்தின் ஆலோசனைக்கிணங்க கோவிலுக்குள் ஒரு தடவையில் 50 பக்தர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

அவர்கள் தங்கள் நேர்த்திகளை நிறைவேற்றி வெளிச் சென்ற பின்பு அடுத்த 50 பக்தர்கள் கிரமமாக உள்வாங்கப்படவுள்ளனர் எனக் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதைக் கருத்தில்கொண்டு பக்தர்கள் தங்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென நிர்வாகம் மேலும் அறிவித்துள்ளது.

# சோதனைச் சாவடிகள் அதிகரிப்புக் குறித்து பாதுகாப்புச் செயலாளருக்கு அவசரக் கடிதம்

## செல்வம் அடைக்கலநாதன் அனுப்பிவைப்பு

வட மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் குறித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணவர்தனவிற்கு அவசர கடிதமொன்றை இன்று அனுப்பி வைத்துள்ளார்.



அந்தக் கடிதத்தில் –

காரணம் இல்லாமல் யாழ். மாவட்டத்தில் அதிகரிக்கும் சோதனைச் சாவடிகள் தொடர்பாக நான் முறைப்பாடு ஒன்றினை முன்வைக்கிறேன்.

வட மாகாணத்தின் அதி உயர் பாதுகாப்பு வலையத்துக்கு வெளியே குறைந்தளவான சோதனைகளுடன் சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழ்நிலை கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் நிலவியது. இதன் காரணமாக மக்கள் சுதந்திர நிலையை உணர்ந்தார்கள்.

ஆனால் தற்போது யாழ் மாவட்டத்தில் பல இடங்களில் சோதனைச் சாவடிகள் காணப்படும் அதேவேளை, அவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இதன் காரணமாக வியாபாரம், மீன்பிடி உள்ளிட்ட தொழில்களில் ஈடுபடுவோரும், இரவு நேரங்களில் பயணங்களை மேற்கொள்வோரும் பல சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

படையினரால் மக்களை நோக்கி முன்னெடுக்கப்படும் பல செயற்பாடுகள் காரணமாக வட மாகாணத்தின்பொதுமக்கள்பெரிதும்அச்சத்துக்குஉள்ளாகியிருக்கின்றனர்.

தேவையான இடங்களில் பாதுகாப்பு சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டிருப்பது தொடர்பாகப் பாராட்டுக்களை தெரிவிக்கும் அதேவேளை, தேவையற்ற இடங்களில் சோதனைச் சாவடிகளை அமைத்துப் பாதுகாப்பின் பெயரால் மக்களைக் கஷ்டங்களுக்கு உள்ளாக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரிக்கை விடுக்கிறேன் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட மாகாணத்தில் வீதி விபத்துக்கள் தொடர்வதை அனுமதிக்க முடியாது!

## உடன் நடவடிக்கைக்கு ஆளுநர் பணிப்பு; விசேட திட்டங்களும் முன்மொழிவு

வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வீதி விபத்துக்கள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்று ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காகப் பொலிஸாருடன் இணைந்து அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் விசேடமாக முக்கிய வீதிகளில் உடன் அமுலுக்கு வரும் வகையில் கண்காணிப்புக் கமராக்களை பொருத்துமாறும், கனரக வாகனங்கள் நகரங்களினுள் பிரவேசிப்பதற்கான நேரக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துமாறும் ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் வீதி விபத்துக்கள் மற்றும் சட்ட ஒழுங்குகளின் நிலைமைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மகாண ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.



அந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் அண்மைய தினங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஆளுநர், தொடர்ச்சியாக விபத்துச் சம்பவங்கள் நடைபெறுவதற்கான காரணங்கள் தொடர்பான விளக்கங்களைக் கோரியிருந்தார். இதன்போது இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்பதையும் திட்டவட்டமாக அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

வீதி விபத்துக்களைத் தவிர்த்து அதனூடாக ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுத்த வேண்டும்.

உரிய தகவல்கள் கொண்ட வீதி அறிவித்தல் பலகைகள் வைக்கப்பட வேண்டும். கால்நடைகள் வீதிகளில் நடமாடுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வீதிப் புனரமைப்பை இரவு நேரங்களில் செயற்படுத்துவதன் மூலம் போக்குவரத்து நெருக்கடிகளையும், விபத்துக்களையும் தடுக்க முடியும்.

போதுமான அளவுக்கு வாகனத் தரிப்பிடங்களை ஏற்படுத்த வேண்டும். முக்கியமான இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட வேண்டும். வீதிகளின் இரு பக்கங்களையும் சுத்தப்படுத்திப் பராமரிக்க வேண்டும். கனரக வாகனங்கள் நகருக்குள் உட்பிரவேசிப்பதற்கான நேரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.

வீதியோரங்களிலுள்ள மரக்கிளைகளை இனங்கண்டு அவற்றை அகற்ற வேண்டும். தொடர் விபத்துக்களை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் அதிகாரிகள் விசேட கவனம் செலுத்த வேண்டும் – என்றார்.

## மோசமான காலத்தை நோக்கி நகரும் நாடு!

### கோட்டாபயவின் ஆட்சி குறித்து தயான் ஜயதிலக முன்னெச்சரிக்கை



மஹிந்த ராஜபக்ஷ அரசைவிட மோசமான காலத்தை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கின்றது.

–இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை அரசு அதிகாரங்களை ஒரே இடத்தில் குவித்துள்ளது. அதிகார ஏகபோக நிலை காணப்படுகின்றது.

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவினதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பழைய மோசமான நாள்களுக்குத் திரும்புகின்றோம் எனக் கூறுவதைவிட அதைவிட மோசமான நிலையை நோக்கிப் பயணிக்கின்றோம் என்றே சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது பிரதமரையும் அமைச்சர்களையும் உள்ளடக்காத பல செயலணிகளை நிர்வகித்து வருகின்றார்.

இந்தச் செயலணிகள் நாட்டில் மிக மோசமான நிலையை ஏற்படுத்தவுள்ளன.

அரச நிர்வாகத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையானவர்கள் முன்னாள் இராணுவ அதிகாரிகளாகவும், முன்னர் ஒருபோதும் இல்லாத அளவு குடும்ப உறுப்பினர்களாகவும் காணப்படுகின்றனர். இந்தநிலையில், ஏனையவர்களுக்கு எங்கு இடமுள்ளது? – எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## 13 பிளளை பாதுகாத்தே தீரவேண்டும்

### சஜித் வலியுறுத்து



அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் அதன் கீழுள்ள மாகாண சபை முறைமையையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

அதனைப் பாதுகாப்பதற்காகக் கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நான் ஒரே கருத்தையே தெரிவிப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நான் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கில் ஒரே விடயத்தையே தெரிவிப்பேன். நான் தெரிவிப்பதையே பின்பற்றுவேன்.

பொதுமக்கள் இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையையும் பௌத்தத்துக்கான முன்னுரிமையையும் பாதுகாக்க வேண்டும்.

இன்னொரு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாவதை எதிர்க்கும் தேசப்பற்றுள்ளவர்கள் என்ற ரீதியில் அதிகாரங்களை வழங்கும் மாகாண சபை முறைமையைப் பாதுகாக்க வேண்டும் எனக் கருதுகின்றோம்.

அரசின் செயற்திறன் இன்மை காரணமாக மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச், ஏப்பிரல் மாதங்களுக்கான மின்கட்டணத்தைப் பெறப்போவதில்லை எனத் தெரிவித்திருந்த அரசு தற்போது அந்தக் கட்டணங்களைச் செலுத்தாவிட்டால் மின்சாரத்தைத் துண்டித்து விடுவதாக எச்சரித்துள்ளது – என்றார்.

## அரச வாகனங்களைப் பிரமுகர்கள் பிரசாரத்துக்குப் பயன்படுத்தத் தடை

அரசியல் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களைப் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாகனத்தை தனியார் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது சட்ட விரோதமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோன்று வேட்பாளர்களின் பதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை குறித்து சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## அமீரகத்திலிருந்து மத்தளவுக்கு 298 பேர் வந்தனர்

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து மேலும் 298 பேர் இன்று நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இலங்கை எயர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் - 226 என்ற சிறப்பு விமானத்தின் மூலமாக இன்று காலை மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு அவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அழைத்துவரப்பட்ட அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 164 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்

வவுனியா, ஜூலை 09

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய நிலையில் வவுனியா பெரியகட்டு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 164 பேர் இன்று அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

கொவிட் – 19 நோய்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன .

அந்தவகையில் கடந்த மாதம் 27 ஆம் திகதி அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட பலர் வவுனியா பெரியகட்டு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில், இன்றைய தினம் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதற்கமைய பெரியகட்டு முகாமிலிருந்து 92 பேரும், பம்பைமடு முகாமிலிருந்து 72 பேரும் என மொத்தமாக 164 பேர் அவர்களது சொந்த இடங்களான புத்தளம், காலி, மாத்தறை, களுத்துறை போன்ற பகுதிகளிற்கு பஸ்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தப் பயணிகளிற்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பதுஅன் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிறைக் கைதிகள் 204 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 09

சிறைக்கைதிகள் 204 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

பொலனறுவைசிறைச்சாலையிலுள்ள 11 கைதிகளும், பல்லேகல சிறைச்சாலையிலுள்ள 7 கைதிகளும் நேற்றிரவு தனிமைப்படுத்திக் கண்காணிக்கும்நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிறைச்சாலை அதிகாரிகள் 9 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைஅடுத்து இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 2,094 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# எம்.சி.சி. மீளாய்வுக்காக மேலும் 2 வார அவகாசம்

கொழும்பு, ஜூலை 09

எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் அமைச்சரவையின் பரிந்துரைகள் முன் வைக்கப்படுவது தொடர்பில் இன்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

சில அமைச்சர்கள் தமது கருத்துகளை எழுத்துமூலம் முன்வைத்துள்ளமையோடு தானும் தனது தனிப்பட்ட விமர்சனத்தை அமைச்சரவைக்கு அனுப்பியுள்ளார் எனப் பந்துல குணவர்தன கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் ஆராய வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர் எனவும், இந்த அறிக்கை தொடர்பான மீளாய்வுக்கு மேலும் 2 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதன் போது தெளிவுபடுத்தினார்.

# சட்டவிரோத மின் இணைப்புகள்; 10 கோடி ரூபா அபராதம் அறவீடு

கொழும்பு, ஜூலை 09

சட்டவிரோதமாக மின்சார இணைப்புகளை பெற்றவர்களிடம் 10 கோடி ரூபா அப ராதம் அறவிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே இந்த அபரா த் தொகை அறவிடப்பட் டுள்ளதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத மின் இணைப்புகள் பெற்றமை தொடர்பில் 1,930 சுற்றிவளைப்புகள் கடந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்டனஎனவும்அவர்கூறியுள்ளார்.

மின் அலகு அளவிடல் மானியை மாற்றி அமைத்தல், சட்டவிரோதமாகப் பிரதான மின் கம்பியிலிருந்து மின் இணைப்பைப் பெறுக்கொள்ளுதல்உள்ளிட்ட பல் வேறு சம்பவங்கள் தொடர் பில் சுற்றிவளைப்புகள் மேற் கொள்ளப்பட்டன எனவும் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணைப் பிரிவினரால் இந்த சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து, வழக்குக் கட்டணமாக 60 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணம் அறிவிடப்பட்டுள்ளதாகவும் சுலக்ஷன ஜயவர்தன மேலும் கூறியுள்ளார்.

சட்டவிரோதமாக மின் இணைப்புகளைப்பெற்றுக் கொள்பவர்கள் காணப்படும்பட்சத்தில் உடனடியாக இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணைப் பிரிவிற்கு அறிவிக்குமாறு மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜய வர்தன இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

# பூவரசங்குளம் பகுதியில் 6 மாத யானைக்குட்டி மீட்பு

வவுனியா, ஜூலை 09

வவுனியா பூவரசங்குளம் வேலங்குளம் பகுதியில் தனிமையில் திரிந்த 6மாத யானைக்குட்டி ஒன்றை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

பூவரசங்குளம் வேலங்குளம் பகுதியில் நேற்றையதினம் மாலை கோவிலுக்குச் சென்ற சிலர் கோவிலுக்கு அருகாமையில் பூ பிடுங்குவதற்காகச் சென்றுள்ளனர். இதன்போது தனிமையில் நின்ற அந்த யானைக்குட்டி அவர்களை பின்தொடர்ந்து வந்துள்ளது. அதனையடுத்து அயலவர்கள்யானைக்குட்டியைப் பாதுகாப்பாக வைத்திருந்ததுடன் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

அவ்விடத்துக்கு விரைந்த வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தினர் அவ்விடத்தில் வேறு யானை நிற்கின்றதா என ஆராய்ந்த பின்னர் தனிமையில் நின்ற குட்டியானையை மீட்டு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்திற்கு எடுத்துச் சென்றனர்.

ஆறு மாதமாகிய குறித்த குட்டியானை மருத்துவ பரிசோதனைகளுக்காக கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

(ஐ -100)





# இந்தியப் பிரஜை ஒருவர் பம்பலப்பிட்டியில் கைது

கொழும்பு, ஜூலை 09

கனடாவில் வேலை வாய்ப்புகளை பெற்று தருவதாக தெரிவித்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் இந்தியப் பிரஜை ஒருவர் பம்பலப்பிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு ஊழல் விசாரணை பிரிவின் அதிகாரிகள் முன்னெடுத்த சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இந்திய பிரஜை, கனடாவில் வேலைவாய்ப்புகளைப் பெற்று தருவதாக தெரிவித்து 1,22,535 ரூபா பணம் மோசடி செய்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 32வயதான சந்தேநபர் இன்று கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்து அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, ஜூலை 09

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து ஆராய பொலிஸ் தலைமையகம் விசேட நடவடிக்கை மையத்தை நிறுவியுள்ளது.

இதேவேளை தேர்தல் விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

குறித்த தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி பின்வருமாறு:-

நேரடி தொடர்புகளுக்கு- 1933/ 011 2472757

ஏனைய தொடர்புகளுக்கு - 011 - 5978701/ 011 - 5978702 / 011 - 5978703/ 011 - 5978714/011 - 5978719/011 - 5978721/ 011 - 5978722/ 011 - 5978737

பொலிஸ் தலைமையகம் - 011 - 2421111/ 3051

தொலைநகல் - 011 - 2345553/ 011 - 2327706/ 011 - 2440433

கையடக்கத் தொலைபேசி - 071 - 8592717

மின்னஞ்சல் - igp.crpolice.lk

# ஒரு மாத சுற்றிவளைப்பில் 62 ஆயிரத்து 686 பேர் கைது

கடந்த ஜூன் மாதம் 06ஆம் திகதி முதல், இம்மாதம் 08ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 62 ஆயிரத்து 686 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 12 ஆயிரத்து 186 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டில் 23 ஆயிரத்து 446 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## நூற்றுக்கணக்கான ஆயுதங்கள் மீட்பு

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 8 ஆயிரத்து 87 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 ஆயிரத்து 6 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 515 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 128 பேரும், வெடிபொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 12 ஆயிரத்து 307 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளில் ரி - 56 வகை துப்பாக்கிகள் 11, ரி - 81 வகை துப்பாக்கி 01, 12 துளை கொண்ட துப்பாக்கிகள் 42, கைத்துப் பாக்கிகள் 04, உள்நாட்டுத் தயாரிப்பு துப்பாக்கிகள் 29, ரிபிட்டர் வகை துப்பாக்கிகள் 74, வேறு துப்பாக்கிகள் 15, தோட்டாக்கள் 692, வாள்கள் 06, கத்திகள் 02 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின்போது வெடிபொருள், டெட்டனேட்டர்கள், கைக்குண்டுகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு, 4 இலட்சத்து 37 ஆயிரத்து 466 லீற்றர் சட்டவிரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2020 இல் வெளியிடப்பெற்றது.